TRANSPARENCY INTERNATIONAL
the global coalition against corruption

# வெளிப்படுத்தல்

உள்டக்கம்

1. கொள்கை அறிமுகம்.
2. வறுமை - ஊழல்களிடையே உள்ள தொடர்புகளை அறிந்து கொள்ளல்.
3. சக்கரத்தை உடைத்தல்.
4. அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்தல்.



# வறுமையும் ஊழலும்

2007ஆம் வருடம் வறுமை மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கு எதிராகப் போரிடும் மைல்கல்லாக அடையாளம் காணப்பட்டது. 2015 ஆம் வருடம் ஆகும்போது, வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மிகவும் விருபபுக் கொண்ட உலகளாவிய உறுதிமொழியான மிலேனிய அபிவிருத்தி இலக்கினை (M.D.G) அடைவதற்கான பாதையின் நடுமத்திய நிலையை அது பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஊழலுக்கு எதிரான இயக்கம் அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாக வறுமை பற்றி உரை நிகழ்த்த அனுமதி வழங்கிய 'லிமா' பிரகடனத்தில் கைச்சாத்திட்டுப் பத்து வருடங்கள் கடந்துள்ளன என்பதனை இது பறைசாற்றுகின்றது.

எனினும் உண்மையான முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டதையும் விட குறைவாகவே இருந்தது. நடைமுறையில் ஒரே உபாய மார்க்கத்தின் பூரண அங்கங்களாகவல்லாது வறுமையையும், ஊழலையும் வித்தியாசமானவைகளாகவே உதவி வழங்கும் நிறுவனங்களும், அரசாங்கமும் கருதுகின்றன. தொடர்ச்சியான கொள்கை ஒன்றிணைப்பு போதாமை, வறுமை மற்றும் ஊழல் ஆகிய இரண்டிற்கும் எதிரான போராட்டத்தையும் பலவீனப்படுத்தியுள்ளது. வறுமை உலக மக்களின் அரைவாசிக்கும் மேலானோரை தொடர்ந்தும் வருத்துகின்றதோடு அண்ணளவாக மூன்று பில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு இரண்டு டொலர்களுக்கும் குறைவான வருமானத்திலேயே வாழ்கின்றனர். தற்போதைய அபிவிருத்திப் போக்குகள் முன்னைய திட்டமிடுதல்களுடன் ஒத்துப்போவதில்லை என்பதனையே (ஆ.னு.பு) மிலேனிய அபிவிருத்தி இலக்குகளில் தரவுகள் காட்டுகின்றன. 2015ஆம் ஆண்டின் இலக்குகளை அடைவதில் சில பிராந்தியங்களிலும், பிரதானமான நாடுகளிலும் சவால்களை உருவாக்கி தடைகளை ஏற்படுத்தியுள்ளன.

**ஏழைகளின் மீதான ஊழலின் வரி**

**ஏலவே மிகவும் தாக்கத்திற்குள்ளான குடும்பங்களினது வளங்களைக் கொள்ளையிடுகின்ற மற்றும் ஏழைகள் மீதான அவர்களைப் பின்நோக்கிச் செலுத்தக்கூடிய வரியாகவே ஊழல் செயற்படுகின்றது.**

**ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உழைப்பதில் சுமார் 25வீதம் சிறு ஊழல்களுக்குச் செலவாகின்றது என அண்மையில் மெக்சிகோவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் அறிக்கை கூறுகின்றது.**

**மருத்துவ சேவைகளை நாடுதல், பாடசாலைகளுக்குச் செல்லல் அல்லது பொலிஸாரின் உதவியை நாடுதல் போன்றவற்றிற்காக ஏனைய வருவாய்க் குழுக்களையும் விட ஏழை மக்கள் தொடர்ச்சியான முறையில் அதிகமான இலஞ்சம் வழங்குகின்றார்கள். என் ட்.இ இனது 2007ம் ஆண்டின் உலகளாவிய் ஊழல் பாரமானி காட்டுகின்றது.**

**இலஞ்சம் வழங்க வசதியற்றோர் மேலும் மேலும் ஓரங்கட்டப்பட்டு எந்த வழிகளுமின்றி மறக்கடிக்கப்பட்ட பிரஜைகளாக்கப்படுகின்றனர்.**

**உலக வங்கி எச்சரித்துள்ளவாறு சரியான முறையில் வறுமையைக் குறைப்பதற்கான மிகப் பெரும் தடை ஊழல் ஆகும்.**

## 1. பொதுக் கொள்கையை அறிமுகஞ்செய்தல்

அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை தமது அபிவிருத் திக்காகக் கொண்டுவர விரும்பும் நாடுகளினது வறுமையைக் குறைக்கும் கடந்த கால மற்றும் தற்போதைய முயற்சிகள் பற்றிய கையிருப்பை ஆராயும் போது ஊழல் இதற்குத் தொடர்ச்சியான ஓர் தடையாக இருந்துள்ளது. வித்தியாசமான நாடுகளின் பின்னணியில் பார்க்கும் போது ஊழலானது, வறுமை ஏற்படுவதற்குக் காரணமாயுள்ளதோடு அது வறுமையின் பின் விளைவாகவும் அமைந்துள்ளது.

அரசாங்கங்கள், தனியார் துறை மற்றும் பிரஜைகள் மட்டத்தில் இடம்பெறும் ஊழல், தீர்மானம் எடுத்தல், வரவு செலவுத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தும் செயன்முறைகளில் ஓரக் கண்களால் பார்ப்பதனால் அபிவிருத்தி முயற்சிகள் அவற்றின் அடிவேரிலேயே பாதிக்கப்படுகின்றது. இவைகளில் சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைத் தனது தனிப்பட்ட நலன் கருதித் துஷ்பிரயோகம் செய்யும்போது, ஊழலானது பிரஜைகளில் பங்குபற்றுதலை மறுப்பதோடு, பொது வளங்கள் தனியார் கைகளுக்குத் திசை திரும்புகின்றது. இந்த ஊழல் சங்கிலி காரணமாய் பொது மக்கள் அரச ஒத்துழைப்பு மற்றும் அவர்கள் கோரிய சேவைகள் ஏதுமின்றி இறுதியில் அவர்கள் நட்டமடைந்தவர்களாவர்.

இதேவேளை, ஊழல் என்பது வறுமையின் பக்க விளைவாகும். ஏலவே ஒதுக்கப்பட்ட ஏழைக்ள் விளையாட்டின் விதிமுறையாக ஊழல் தாண்டவமாடும் நாடுகளில் தம்மைத் தள்ளி வைத்திருப்பதன் இரு மடங்கினை உணர்ந்து வருந்துகின்றனர். ஊழல் சூழலில், செல்வம் கைப்பற்றப்படுகின்றது. வருமான சமமின்மை அதிகரிக்கின்றது. மற்றும் ஓர் விசேடமாக ஏழை மக்களின் தேவைகளை நிறைவேற்றும் போது அரசாங்கத்தின் ஆட்சிபுரியும் ஆற்றல் குறைகின்றது. இவ்விளைவுகள் பிரஜைகளுக்கு, ஏழை மக்கள் பொறியில் சிக்குண்டு அபிவிருத்தி ஸ்தம்பிதமடைந்த காட்சி ஒன்றையே உருவாக்குகின்றது. அடிப்படைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலஞ்சம் மற்றும் சட்டவிரோத கொடுப்பனவு போன்றவைகளில் தங்கி நிற்கவேண்டிய நிலைக்கு ஏழை மக்கள் அடிக்கடி தள்ளப்படுகின்றனர். நாடொன்றிற்கு இப்பெறுபேறுகள் பலவிதமான மற்றும் உருப்படியில்லாத குழுக்களையும் தோற்றுவிக்கின்றது. அதிகரித்த ஊழல், நிலைநிறுத்தப்பட்ட வளர்ச்சி குன்றுதல் மற்றும் வறுமைக் குறைப்பு குறைந்த வீதத்தில் இடம்பெறல் என்பனவாகும். உலக வங்கி தகுந்த முறையில் எச்சரித்துள்ளபடி வறுமையைக் குறைப்பதற்குள்ள மிகப் பெரிய தடை ஊழலாகும்.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வோர் பிரிவுகளும் வறுமை மற்றும் ஊழல் ஆகிய இரண்டினதும் காரணங்கள் மற்றும் விளைவு தொடர்பான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புகின்றது. அத்தோடு அவைகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை மீளமைக்கவும் இல்லாது செய்யவும் உள்ள அதன் செயற்பாட்டினை விபரிக்கின்றது.

## 2. வறுமை, ஊழல் இரண்டிற்குமிடையிலான தொடர்பினைப் புரிந்து கொள்ளல்

ஏழையாயிருப்பது என்பதன் கருத்து குறிப்பிட்ட ஓர் வருமானக் கோட்டிற்குக் கீழ் விழுவது மாத்திரமல்லாது வறுமை என்பது அத்தியவசிய சேவைகளுக்கான வழி (சுகாதாரம், கல்வி, ஆரோக்கிய வசதி ஆகியன) அடிப்படைக் குடியுரிமை, அதிகாரமளித்தல் மற்றும் மானிட அபிவிருத்தி உட்பட பல பரிமாணங்களைக் கொண்ட அபூர்வமான பல்வேறுபட்ட காரணிகளின் சிறப்பியல்பாகும். (ஆ.னு.பு) வறுமை என்ற இந்த பரந்த பொதுக் கொள்கையினையும், இது உண்மையான வருமான அளவீட்டிற்கு அப்பாற் செல்லவேண்டும் என்ற யதார்த்தையும் அங்கீகரிக்கின்றது. 2000 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட சகாப்த பிரகடனத்தின் பிரதான ஆவணம் சுதந்திரத்தின் மதிப்பு, பாரபட்சமின்மை, ஒருமைப்பாடு மற்றும் சகிப்புத்தன்மை போன்றன வறுமையைக் குறைப்பதற்கான பிரதான அபிவிருத்திச் சவால்களைச் சமாளிப்பதனை விருத்தி செய்கின்றது.

ஊழல் ஒரு தனிநபரின் மனித உரிமை மற்றும் அதனைப் பாதுகாக்க உத்தேசமாயுள்ள சட்டவரம்பு மற்றும் அபிவிருத்தியின் இத்தூண்களைப் பலவீனப்படுத்துகின்றது. அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்கு வகை கூறாமல் கொள்கைகளை ஏற்படுத்த, கலந்தாலோசனைகளின்றி ஒதுக்கீடு களை மேற்கொள்ளமுடியுமான நாடுகளில் உரிய முறையில் அல்லாத செல்லவாக்கு, சமநிலையற்ற அபிவிருத்தி மற்றும் வறுமை ஆகியன பிரதிகூலமாக அமையும். மக்கள் (அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியில் அதிகாரமற்றவர்களாவர்) அத்தோடு இச்செயற்பாடுகளில் மேலும் வளம் குன்றச் செய்யும்.

### ஊழல் மற்றும் மனித அபிவிருத்திகளுக்கிடையேயுள்ள பரஸ்பர சம்பந்தம்

**ஊழல் தாண்டவமாடும் போது அரசியல் வகைகூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் உட்படுத்துதல் போன்ற ஊழல் போராட்டத்திற்கு எதிரான பிரதான காரணிகள் குறிப்பிடத்தக்க அளவில் பலவீனப்படுத்தப்படுகின்றது மற்றும் சில வேளைகளில் மறக்கடிக்கப்படுகின்றன.**

**ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் தொகுக்கப்பட்ட ஊழல் தோற்ற சுட்டி (ஊீஜ) யில் பட்டியலிடப்பட்டுள்ள முன்னணி நாடுகளுடன் (டென்மார்க், பின்லாந்து, நியூசிலாந்து மற்றும் சிங்கப்பூர்) அடிமட்டத்திலுள்ள நாடுகளை (சோமாலியா, மியன்மார், ஈராக் மற்றும் ஹெயிற்றி) ஒப்பிடும்போது வறுமை, பாரபட்சம் மற்றும் ஊழல்களுக்கிடையில் ஒரு சில தொடர்புகளுக்கான சிக்கல்களிலிருந்து விடுபடக்கூடிய ஆரம்ப நிலையைப் பெற முடிகின்றது.**

**நாடுகளுக்கான ஊீஜ அளவுகளின் மனிதவள அபிவிருத்திச் சுட்டிப் பட்டியலுடன் ஒப்பிடும் போது மனிதவள அபிவிருத்திச் சுட்டியினால் (ர்னுஜ) அளவீடு செய்யப்பட்டுள்ளவாறு ஊழல் மற்றும் அபிவிருத்தி இரண்டிற்குமிடையே உறுதியானதோர் சம்பந்தம் எழுகின்றது. ஊழல் குறைவாகக் காணக்கூடிய நாடுகளிலே மனிதவள அபிவிருத்திச் சுட்டி கூடுதலாகவும் ஊழல் கூடிய நாடுகளில் குறைவாகவும் காணப்படுகின்றது.**

**ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ர்னுஜ யின் கீழ் கல்வி மற்றும் வயது வந்தோரிடையேயான எழுத்தறிவு, ஆய்வுக்காலம் மற்றும் குடும்ப வருவாய் இவைகளுக்கான சுட்டிப் புள்ளிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. 177 நாடுகள் இந்த வட்டத்தினுள் (கூடுதல் மத்திய, குறைந்த) விழுகின்றன.**

ஊழலை ஒழிக்கவென உத்தேசிக்கப்பட்ட பணம், பொருட்களையும் ஊழல் விழுங்கிவிடும். இந்த ஒழுங்குகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி முதலீட்டு மட்டம், வறுமை ஒழிப்பு முயற்சிகள் மற்றும் ஏனைய அபிவிருத்தி சம்பந்தமான முன்னேற்பாடுகளை விட்டுக் கொடுக்கச் செய்யும். அதே நேரத்தில் அற்ப ஊழல்கள் காரணமாக ஏழை மக்கள் தமது அடிப்படைப் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பகரமாக இலஞ்சம் கொடுப்பதற்கு வற்புறுத்தப்படுவதனால் ஏழை மக்களுடைய வளங்கள் உறுஞ்சப்படுகின்றன. கல்வி, சுகாதாரம் போன்ற பல் சேவைகள் சட்டத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. (2ம் பக்கத்தின் பக்க விலக்கைப் பார்க்கவும்) பாடசாலைக்குச்செல்ல முயலும் போது, தொழில் ஒன்றைப் பெறும்போது, வீடு ஒன்றை வாங்கும்போது, வாக்களிப்பு அல்லது அவர்களது சமூகத்தில் இலகுவாகக் கலந்துகொள்ளும்போது முகம்கொடுக்க நேரிடும் தள்ளிவைத்ததிலிருந்து தப்பிப் பிழைக்கும் உபாய மார்க்கமாக ஏழை மக்கள் ஊழலை அடைக்கலமாக நாடலாம்.

இத்தடங்கல்களை நீக்கும் பொருட்டு, அரசாங்கங்களினதும், உதவி வழங்கும் நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடனான கொள்கை மற்றும் தலையீடுகள் எவ்வாறு வறுமை, சமநிலையின்மை மற்றும் ஊழல் ஆகியன ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை என்பதனை அங்கீகரிக்கக்கூடிய முயற்சிகளை ஒன்று சேர்க்கவேண்டும். (பக்கவிலக்கைப் பார்க்கவும்)

வறுமைக்கெதிரான போராட்டம் விசேடமாக வறிய நாடுகளில் இரண்டு பொருட்களை இணைத்து உரையாற்றும்போதே தங்கி நிற்கக்கூடியதாகவும், வெற்றியளிக்கக்கூடியதாகவும் இருக்கும். அரசியல், பொருளாதார மற்றும் சமூக சமநிலையற்ற நிலை வறுமை மற்றும் ஊழலையும் உருவாக்கி மேலும் அதிகரிக்கச் செய்யும்.

ஏழைகள் சார்பான ஊழல் எதிர்ப்பு உபாய மார்க்கங்கள் ஏழைகளுக்கு ஏற்படக்கூடிய நன்மை மற்றும் அபாயம் பற்றி மதிப்பீடு செய்யக்கூடிய முயற்சிகள் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் விருத்தி செய்யப்படும் போது மிகவும் பயனுள்ளதாயிருக்கும். அதற்கு மேலதிகமாக, தேர்தலுக்கு முன்பு அரசாங்க அதிகாரிகள் பதவியேற்றவுடன், கொள்கைகளைக் கருத்திற்கொண்டு திட்டமிடப்படும்போது ஊழலைச் சமாளிக்க ஆரம்பித்தால் அது தலையீட்டின் நற்பயனை அதிகரிக்கச் செய்யும்.

## 3. காலச்சக்கரத்தை உடைத்தல்

வறுமை மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவது என்பதானது குடிமக்களின் நடவடிக்கைகள் மற்றும் அரசின் வகைகூறும் நிலைக்கு எதிராகவுள்ள தடங்கல்களைக் கையாள்வதும் அவற்றை வெற்றிகொள்வதுமாகும். சுமனான பங்குகொள்ளல் மற்றும் பிரஜைகளின் உரிமை இருப்பதாக, அபிவிருத்தியடைந்துவரும் பல் நாடுகள் உரிமைகோரிய போதிலும் நடைமுறையில் ஏழைகள் விடயத்தில் மிக அரிதாகவே உபயோகப்படுத்தப் படுகின்றன.

ஏழை மக்களின் உரிமைகளை தடுத்து வறுமையை ஞாபகத்தில் நிறுத்தி ஒரு நாட்டில் மாறாத நிலையைப் பேணும்பொருட்டு அரசியல் நிறுவனங்கள், கட்சிகள் மற்றும் அதன் செயன்முறைகளைத் திரிபுபடுத்தி, மாற்றியமைக்கும் பொருட்டு ஊழலை உபயோகிக்க முடியுமென ட்.இ இன் உலகளாவிய் ஊழல் அறிக்கை (2004) சாடை காட்டியுள்ளது. குறிப்பிடப்பட்டது போலவே ஓரங்கட்டுதல் மற்றும் அரசியல், பொருளாதார மற்றும் சமூகத்திலிருந்து தவிர்த்தல் பாரியளவில் காணப்படுவதனால் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட ஏழைகள் அடிக்கடி கட்டாயத்திற்குள்ளாகினறனர். இது சமூக அபிவிருத்திக்கு பாரிய சவால்களை விடுக்கின்றது. ஊழல் எதிர்ப்புத் திட்டங்கள் அடிப்படைச் சேவைகளை சட்டரீதியாக நாடும் மாற்று முறைகளை ஏற்படுத்தாவிடின், நாம் உதவி செய்ய நாடும் மக்கள் மீது அது எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

ஏழைகள் சார்ந்த ஊழல் எதிர்ப்புத் தந்திரோபாயங்கள் பயனளிக்கவேண்டுமெனில், ஏழை மக்கள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவிருக்கும் சந்தர்ப்பங்களை மட்டுப்படுத்துகின்ற தன்மை, பாரிய பின்னணியுடன் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டும்.

### ரஜைகள் வகைகூறும் கருவி

**ட்.இ இயக்கம் பல் இலட்சக் கணக்கான பிரஜைகளின் தேவைகளுக்கு உதவுகின்றது. விசேடமாக ஏழை மக்களுக்கு அவர்களின் அரசியல் பிரதிநிதிகளை அவர்கள் எடுக்கும் தீர்மானங்களுக்காக வகைகூறவைப்பதற்காகும்.**

**'மக்களைச் சந்தியுங்கள்' வங்காள தேச ட்.இ இனால் ஒழுங்கு செய்யப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி வகைகூற வேண்டிய அறைகூவுவதற்காகவென பிரஜைகள் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஏனைய ட்.இ தேசிய பிரிவுகளில் உதவி மற்றும் சட்ட ஆதரிப்பு நிலையம் என அழைக்கப்படும் உதவி நிலையம் நேரடியான ஊழல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பிரஜைகளுக்கு உதவுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கொள்கைத் தெரிவுகள் சம்பந்தமாக மக்களுக்கு வகைகூறுவதனை உறுதி செய்யுமுகமாக ட்.இ யின் ஜோர்ஜியா பிரஜைகளுக்கும் - பாராளுமன்ற உறுப்பினர் களுக்குமிடையில் செய்திப் பரிவர்த்தனையை ஏற்படுத்தும் முகமாக இவ்வசதிகளை உபயோகப்படுத்துகின்றது.**

**உதவி பெறக்கூடிய நாடுகள் தமது அரசியல் செயற்பாட்டில் அதிக வகைகூறல் அல்லது ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் (ருழேஊயுஊ) சாசனத்தினை அமுல்படுத்த ஆரம்பித்துள்ளதா என பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பின் (ழு ஊனு) எந்தவொரு நாடும் தமது உதவி வழங்கும் திட்டத்தினை இணைத்துப் பார்க்கவில்லை.**

**பிரேஸிலின் பேவல்ஸ், பர்கினா பாஸோவின் பிடென்விலிஸ் அல்லது இந்தியாவின் பேஸ்திஸ் எனும் அபிவிருத்தியடைந்து வரும் நகரங்களிலுள்ள சேரிப்புறங்களிலிருந்து அரசாங்கங்கள் ஈடுபாடு காட்டுவதிலிருந்தும் விடுபடுவதில் பிடிவாதமாயிருந்துள்ளது. இச் ச கங்களிலே ஜனநாயக முறையில் திட்டமிடப்பட்ட மற்றும் குற்றச் செயல்களுடன் இணைந்துள்ள குழுக்கள் அரசாங்கம் ஈடுபாடு காட்டாதபோது தமது நடவடிக்கைகளை தொடருகின்றது. பாதாள உலகக் கும்பல்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது, சட்ட நியதிகளற்று, பீதி, பலாத்காரமாகப் பணம் பறித்தல் மற்றும் பயமுறுத்திக் கட்டாயப்படுத்தல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது.**

அரசியலில் பங்குகொள்ளல் மற்றும் வகைகூறல் ஓரந்தள்ளப்பட்ட சமூககங்களினதும், தனிநபர்களினதும் உரிமைகளை மென்மேலும் வகை கூறக்கூடிய அரசாங்கங்களுடன் இணைப்பதானது ஏழைகள் சார்ந்த ஊழல் எதிர்ப்பு தந்திரோபாயம் ஒன்றை அமைப்பதற்கான அடிப்படை முதல் நடவடிக்கையாகும். பிரஜைகள் தம் சார்பாக இயங்க அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலமே ஒரு நாட்டின் கொள்கைகள் தோற்றுவிக்கப்படுகின்றன (உதாரணமாக வகைகூறும் சக்கரம்). அரசாங்க மற்றும் தனியார்துறை நடவடிக்கையாளரின் ஊழல், இச் செயற்பாட்டை களங்கப்படுத்துவதோடு, அரசியல் யாப்பு மற்றும் நிறுவனங்களையும் திரிபுபடுத்துவதன் விளைவாக வறுமை மற்றும் சமச்சீரற்ற அபிவிருத்திக்கும் வழிகோருகின்றது. அரசியல் வகைகூறலை வலுப்பெறச் செய்வதன் மூலம் ஏழை மக்களைப் பாதிக்கப்பட்டவர்களாக அன்றி ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் பங்காளர்களாகக் காணலாம். (அருகிலுள்ள பக்கவிலக்கைப் பார்க்கவும்) இப்படிப்பட்ட விடயங்கள் மீது மீள் கவனம் செலுத்துவதன் மூலம் போதியளவு வகைகூறல் மற்றும் பிரஜைகள் பங்கேற்றல் இல்லையென விமர்சிக்கப்பட்டுள்ள வறுமைக் குறைப்பு உபாய மார்க்க அறிக்கை (ீசுளீஏ) உட்பட பிரதான அபிவிருத்தித் திட்ட வரம்புகளை எவ்வாறு அணுகுவது என்பது பற்றிய பிரச்சினைகள் எழுகின்றன. இதுவரை அபிவிருத்தி ஒத்துழைப்பு வட்டத்தினுள் இக்கொள்கைகளை எவ்வாறு வலுப்பெறச் செய்வது என்பதற்கான இணக்கப்பாடு காண்பது தொடர்ந்தும் ஏமாற்றமாகவே உள்ளது.

பொருளாதார சமநிலை இல்லாமை மற்றும் சந்தைநிலைத் தோல்வி : செல்வமும் வறுமையும் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் எவ்வாறு இச்செயற்பாட்டை நிலைநிறுத்துகின்றது, என்பதனை அங்கீகரிக்கக்கூடிய ஏழைகள் சார்ந்த ஊழல் எதிர்ப்பு தந்திரோபாயம் ஒன்றை வடிவமைத்தல், அரசாங்க மற்றும் தனியார்துறை சார்ந்தோரினது ஊழல் சந்தைநிலைத் தோல்விக்கு வழிவகுப்பதோடு, அது சமநிலையற்ற வருவாயை உருவாக்கி அதனை நிலைநிறுத்துவும் செய்யும். இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்க உப சகாராவைச் சேர்ந்த பல நர்டுகளில் பன்மடங்காக்கப்பட்ட ஊழல் காரணமாக பாரியளவில் சமநிலையற்ற வருவாய்ப் பகிர்வு ஏற்பட்டுள்ளது. உலகில் மிகவும் சமநிலையற்ற தேசங்கள் 10 இற்காக ஊஜீ தரப்படுத்தலுடன் ஒப்பிடும்போது அரைவாசி நாடுகள் சுட்டியின் கீழுள்ள 40 வீதத்திலேயே அமைகின்றது. பொருளாதாரத்தில் ஊழல் இடம்பெறும்போது, அரசாங்கங்களினாலும், நிறுவனங்களினாலும் போதுமான ஒழுங்கமைப்பு விதிகள் மற்றும் ஊழல் எதிர்ப்புத்திட்ட வரம்புகள் உபயோகப்படுத்தாமை காரணமாகவே துஷ்பிரயோகங்களும், தடங்களும் ஏற்படுகின்றன. ருேர்சுஊ இன் சட்டப் பாதை மற்றும் ஏனைய உலகளாவிய வழிகாட்டல்கள்:மற்றும் நிதித்துறையில் மேலும் கடுமையான ஒழுங்குவிதிகளுக்காக வலியுறுத்தல்,. ஊழல் சமநிலைப்பாட்டின் இப்பகுதினை அணுகுவதற்கான ஒரு முயற்சியாக விளங்கியுள்ளது.

சமூகப் பிளவுகளும் தவிர்தலும்: அரசியல் மற்றும் பொருளாதாரத் தீர்மானம் எடுத்தலுக்கான பிரஜைகளின் வழியை மட்டுப்படுத்தும் சமூகத் தவிர்தலானது ஏழைகள் சார்ந்த ஊழல் எதிர்ப்பு முயற்சிக்கு ஒவ்வாததாகும். சுமூகத்திலிருந்து பிரஜைகள் குழுக்களை ஓரங்கட்டுதல், நல்லாட்சிக் கொள்கைக்கு மாறானதாவதோடு தத்துவ ரீதியாக ஜனநாயக சமுதாயத்தில் அதற்கு இடமில்லை. ஜனநாயகச் சமநிலையைத் தழுவுவதாக நாடுகள் உரிமை கோரிய போதிலும் அது இரட்டை முகம்கொண்ட விதிமுறைகளை பிரயோகிக்க வழியமைக்கின்றது. இதன் மூலம் பிளவுகள் ஏற்பட்டு சமுதாயத்திலுள்ள சமூகக் கூட்டமைப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. பணக்காரர்களுக்கென ஒரு முறை, ஏழைகளுக்கென மற்றொரு முறை என்று வரும்போது சமூகங்களுக்கிடையே முறிவு ஏற்படுகின்றது என் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் எச்சரிக்கின்றது. ஊழல் சம்பந்தப்படும்போது, இப்பிரிவுகள் முரண்பாட்டின் மூலாதராமாக மாறக்கூடும். இது அரசாங்கத்தின் கீர்த்தி, சட்டபூர்வம் மற்றும் பயன்பாட்டில் தாக்கம் ஏற்படுத்துவதோடு இது ஏழைகளை ஆழப்படாமை, சமநிலையின்மை மற்றும் ஊழல் சக்கரத்தில் சிக்க வைக்கின்றது. (பக்கவரியைப் பார்க்கவும்)

#### 4. அடுத்த நடவடிக்கைகளை எடுத்தல்

வறுமை மற்றும் ஊழல் இரண்டையும் சமாளிப்பதற்கு பூரண அணுகுமுறை ஒன்றை மேற்கொள்வது என்பது ஊழலுக்கு எதிராக சம அடிப்படையில் போராடக்கூடியவாறு ஏழைகளுக்கு உதவியளிக்கும் கொள்கைகளை ஆரம்பிப்பதாகும். இது ஏழைகளை ஊழல் எதிர்ப்பு தந்திரோபாயங்களின் பிரதான துன்புற்றோரல்லாமல், பிரதான பங்காளர்களாகவும், நன்மையாளர்களாகவும் மாற்றுகின்றது. ஓரங்கட்டுதல் மற்றும் வளம் குன்றச் செய்தல் ஆகியவற்றை வெற்றிகொள்ள பிரஜைகளுக்கு உதவும் முகமாக ஊழலை ஒழித்து ஏழைகளை வலுவூட்ட இம்முயற்சிகள் மிகவும் பயனுள்ளதாக்கும். ஏழைகள் சார்பான மையம் ஒன்றை ஏற்படுத்தும் ஆரம்ப முயற்சியாக, ஒரு நாட்டின் கொள்கைச் சக்கரம் மற்றும் அபிவிருத்தி நிகழ்வை இலக்காக வைப்பது பயன்தரும். உதாரணமாக, அரசாங்கமொன்றின் அதன் பிரஜைகளுக்கான கொள்கை உத்தரவாதம் ஒன்றில் அதன் கொள்கைச் சக்கரத்தை உறுதியாக நிறுத்தலாம். கொள்கை வகுக்கும் கட்டத்தில் ஏழைப் பிரஜைகள் பிரதானமானவர்களாக உள்வாங்கப்படுவார்கள். அவர்களின் ஈடுபாடுகளை வரிசைப்படுத்தி, கொள்கைகளையும், வரவு செலவினையும் அங்கீகரிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பங்களிப்பைச் செய்யலாம். இதன் மூலம் அரசாங்கத்தின் வகைகூறும் தன்மையிலுள்ள குறைபாட்டினை ஈடுசெய்ய முடியும். கொள்கைச் சக்கரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் விசேட நடவடிக்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு முழு அளவில் அமுல்படுத்த முடியும்.

**மிலேனிய அபிவிருத்தி இலக்கினை 2015ம் ஆண்டில் அடைவதற்கு சர்வதேச ச கம், அரசாங்கங்கள் மற்றும் பிரஜைகளுக்கு எதிர்வரும் வருடங்கள் பாரிய சவால்களை ஏற்படுத்துகின்றது. வறுமையும், ஊழலும் ஏற்படுத்துகின்ற தடங்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும், அவைகளைத் தீர்மானிப்பதற்கான வழிவகைகளை பரிசீலனை செய் வதற்கும் அவை சிறந்த சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்துகின்றது.**

நோக்கங்களை அமைத்தல்: தமது அபிவிருத்தி முன்னுரிமைகளைக் கூறுவதற்காக ஏழைகளுடன் வேலை செய்வதும் மற்றும் தேர்தல்களுக்கு முன்பும் திட்டமிடல் ஆரம்பிக்கப்பட முன்பும் அவர்களைத் தேர்தல்கள் உடன்படிக்கையுடன் இணைப்பது அபிவிருத்தி மற்றும் வகைகூறும் பொறுப்புக்கள் பற்றிய வாய்மூல உத்தரவாதம் பெற உதவும்.

கொள்கையும் திட்டமிடலும்: இக்கட்டத்தில் பங்குகொள்ளும் வறுமை மற்றும் சமூகத் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் பயன்தரும் கருவியாகும். தேசிய அபிவிருத்தித் தந்திரோபாயங்களுக்குள் ஒன்றிணைக்கப்பட்டுள்ள சீரிய நிலையிலுள்ள கோளாறுகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆக்குவதனைத் தீர்மானிப்பதில் ஏழைகளின் கண்ணோட்டத்தை உள்வாங்குவதற்கு உதவ முடியும் பங்குகொள்ளும் கொள்கை, நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டமிடல் சம்பந்தமான விடயங்களில் அவர்களுக்கும் பங்கு உண்டு எனும் விடயங்கள் அங்கீகாரத்தினை உறுதி செய்வதற்கான மாற்றீடாகும்.

**அமுலாக்கல்** அடிப்படைச் சேவைகளை வழங்குவது போன்ற ஏழைமக்களின் வாழ்க்கையைத் தாக்கக் கூடிய தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பினை சம்பிரதாயமாக்குவதற்காக உள்ளூர் மட்டத்தில் அமைக்க முடியும். இந்நிறுவக அமைப்புக்கள் பிரஜைகளுக்கு வகை கூறக்கூடியவாறு நிறுவக ஏற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதற்கு சன சமூக நிலையங்கள் உட்பட பல உதாரணங்கள் உள்ளன.

**கண்காணித்தல்** அறிக்கைப் பத்திரங்களை உபயோகித்தல் மற்றும் உள்ளூர்.ஃ. தேசிய மட்டத்தில் குறைகேள் ஓம்பூட்ஸ்மன் அதிகாரி ஒருவரை நியமித்தல் போன்ற பிரஜைகளை ஈடுபடுத்துவதற்கான குறைந்த செலவிலான பல்வேறுபட்ட செய் முறைகளை உள்ளடக்கலாம். ஊழல் பற்றிய திட்டவரைபு மற்றும் தேர்தல் கண்காணிப்பு ஆகியவற்றில் சமூகத்தை ஈடுபடுத்துவது ஏனைய காத்திரமான நடவடிக்கைகள் ஆகும்.

இதே வேளை, ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டை ஊழல், அரசியல் மற்றும் அபிவிருத்தி ஆகியன முற்றிலும் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலுடன் ஒன்று திரட்டுவதற்கு உதவமுடியும். மேலே குறிப்பிட்டவாறு இது மாறும். பழக்கவழக்கங்கள், மனோநிலை மற்றும் தோற்றம் ஆகியன கொள்கைச் சக்கரத்தினுள் எவ்வாறு கொண்டு நடாத்தப்படுகின்றன என்பதாகும். இம் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான இரு வழி நடாத்து கொள்கைகளாவன..

**பங்குடைமை** வேலைகள் ஏழைகளுக்காகவல்லாது ஏழைகளுடன் சேர்ந்து நடாத்தப்பட வேண்டும். இச்செயற்பாட்டின் ஒவ்வொரு கட்டமும் அவர்களின் ஈடுபாடுகளையும் சமூகத்தை உட்படுத்துவதனையும் விருத்தி செய்ய முடியும். உள்ளூர் மட்டத்திலான சமூக நடவடிக்கைகளை பிரஜைகளின் கூட்டு நடவடிக்கையின் பலத்தையும், தேவையையும் வெளிக்காட்டுவதற்குப் பயன்படுத்தலாம்.

உரிமை அடிப்படையாகக் கொண்டமை: அபிவிருத்தித் திட்ட வரம்புகள், சகல பிரஜைகளுக்கும் அவர்களது தரத்திற்கேற்ப நடமாடக்கூடிய களமாக வழங்கக்கூடிய வழியமைப்பாக நோக்கப்படும். இவ்விடயத்தில் பிரஜைகளது வருவாய், பால், சமயம், கல்வி அல்லது இனம் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. ஏழைகள் அரசியல் செயற்பாட்டில் கலந்து கொள்வது மற்றும் ஒரு நாட்டின் அபிவிருத்திக் கொள்கைகள் அவர்களது மனித கௌரவத்தை நிச்சயப்படுத்தி ஐ.நா. வின் சரத்துக்களின் கீழ் உடன்பட்டுள்ளவாறு சகல பிரஜைகளினதும் மனித உரிமையை மதிக்க வேண்டிய தேவையைப் பிரதிபலிக்கின்றது.

கூட்டாயிருத்தல் மற்றும் உரிமை அடிப்படையாகக் கொண்டு அணுகுவதனைத் தழுவுவதன் மூலம் தனிமனிதர்களின் முயற்சியாக அல்லது இந்த முறைமையின் பகுதிகள் மாத்திரமாய் அல்லாது பொதுப் பிரச்சினைகளுக்குப் பொதுத் தீர்வாக ஊழலை மிகவும் பயனுள்ளவாறு கையாள முடியும். தேசிய ரீதியில், அரசாங்கத்தின் வெவ்வேறுபட்ட பிரிவுகள், தனியார்துறை மற்றும் சிவில் சமூகம் எவ்வாறு அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது மற்றும் அதன் வெளிப்பாட்டைக் கண்காணிப்பதற்கான ஆரம்ப இடத்தைத் திட்டமிடலாம். உலகளாவிய ரீதியில் சர்வதேச உதவி செய்வோர், பல்துறை நிறுவனங்கள் மற்றும் சன சமூக நிறுவனங்கள் அவர்களது அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய பரந்த அர்த்தத்தை ஊழல் எதிர்ப்பு மேடைகளுடன் ஒன்றிணைக்க முடியும்.

இவ்வாறான மாற்றங்களின்றி வறுமை மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இரு முனை நிகழ்ச்சி நிரல்கள் அவற்றின் சமாந்தரமான வெற்றியளிக்காத பாதையில் தொடரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்த செய்கை அறிக்கை ட்.இ செயலகத்தினால் அதன் கொள்கை மற்றும் ஆராய்ச்சித் திணைக்கள உதவியுடன் வறுமை சம்பந்தமான உலகளாவிய நிகழ்ச்சித் திட்டத்தினால் தயாரிக்கப்பட்டது.

வறுமை, அபிவிருத்தி மற்றும் ஊழல் பற்றி ட்.இ மேற்கொள்ளும் வேலைகள் பற்றி மேலும் அறிய http://www.transparancy.org/global_priorities/poverty எனும் இணையத் தளத்தைப் பார்க்கவும்.

இது சம்பந்தப்பட்ட சகல வினாக்களையும் 'ழளநசவல வசயளெியசநஉெல.ழசப எனும் விலாசத்திற்கு அனுப்பவும்.

இச் செய்கை அறிக்கை மற்றும் ஏனையவை பற்றியும் மேலதிக தகவல்களைப் பெற ட்.இ செயலகத்தின் கிரேக் பேகன் ஐத் தொடர்பு கொள்ளவும்.
plres@transparency.org

## References:


1 See: The Lima Declaration. International Anti-Corruption Convention, 7-11 September 1997. www.transparency.ca/Reports/Readings/SR-B16-e-limadecl.pdf.

2 See: www.worldbank.org/data/wdi.

3 For more information on the global progress of the MDGs, see: mdgs.un.org/unsd/mdg/Resources/Static/Products/Progress2007/MDG_Report_2007_Progress_Chart_en.pdf.

4 See: Paolo Mauro, "Corruption and Growth," Quarterly Journal of Economics, 110, 681-712 (1995);Sanjeev Gupta, Hamid Davoodi and Rosa Alonso Terme, "Does Corruption Affect Income Equality andPoverty?" IMF Working Paper 98/76 (Washington, DC: IMF, 1998); Paolo Mauro, "The Effects of Corruption on Growth and Public Expenditure," Chapter 20 in Arnold J. Heidenheimer and Michael Johnston (eds.), Political Corruption: Concepts and Contexts. 3rd ed. (New Brunswick, NJ: Transaction Publishers, 2002).

5 See: www.worldbank.org/anticorruption.

6 See: Amartya Sen, Development as Freedom (Oxford, United Kingdom: Oxford University Press, 1999).

7 See: M. Moore, "Signposts to More Effective States." Paper prepared for the Seventh Annual Global Development Conference. (St. Petersburg, Russia: Jan. 19-21, 2006).

8 According to the Índice Nacional de Corrupción y Buen Gobierno (INCBG) undertaken by TI-Mexico in 2005, approximately 25% of the income in households earning one minimum wage goes to petty corruption. See: www.transparenciamexicana.org.mx/documentos/ENCBG/2005/Folleto_INCBG_2005.pdf.

9 The statistical correlation between the CPI and the HDI (2005) is 0.7156 at p<0.01). For 1995, the correlation was 0.7546 (p<0.01).

10 For more information on these projects, visit: www.ti-bangladesh.org/index.php?page_id=207 and www.transparency.ge/index.php?lang_id=ENG&sec_id=10150.

11 See: W. Eberlei, "Accountability in Poverty Reduction Strategies: The Role of Empowerment and Participation", Social Development Papers: Participation and Civic Engagement (104). (Washington, DC: The World Bank, 2007).

12 See: OECD, "Overview by the DAC Chair," In Development Co-operation Report. Vol.8(1), chapter 1 (Paris, France: OECD, 2007).

13 The comparison is based on 2007 data on Gini coefficients from the World Bank. See: World Bank, World Development Indicators (Washington, DC: World Bank, 2007). Further analysis shows,however, that it is difficult to statistically prove a correlation between corruption as measured by theCPI and the Gini coefficients reported by the World Bank.

14 See: Transparency International, Global Corruption Report. (Oxford, United Kingdom: Oxford University Press, 2007).